தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# ஐக்கிய நாடுகள் சபை விழாவில் கோவை விஞ்ஞானி பங்கேற்பு

**கோவை, மார்ச் 22–**

உலக வனநாள் விழாவை முன்னிட்டு, ஐக்கிய நாடுகள் சபை சார்பில் நடந்த நிகழ்ச்சியில், கோவை வன மரபியல் மற்றும் மரப் பெருக்கு நிறுவனத்தின் விஞ்ஞானி பங்கேற்றார்.

உலக வனநாள், நேற்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய சங்கம் சார்பில், 'மரத்திலிருந்து இசை' எனும் நிகழ்ச்சி, பாங்காக்கில் நடந்தது.

இதில் கோவை வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தின் மூத்த முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், ஆன்லைன் மூலம் பங்கேற்றார். நிகழ்ச்சியில், ஆன்லைனில் மிருதங்கம் மற்றும் தபேலா குறித்த 'லயவிந்யாசம்' வழங்கினார்.

இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்விக் கழகத்தின் வனவியல் துறையில் சிறந்த ஆராய்ச்சிக்கான தேசிய விருதைப் பெற்ற கண்ணன் வாரியர், ஐந்து ஆண்டுகளாக கேரள வேளாண் பல்கலைக்கழகத்தின் 'கலா பிரதிபா' ஆக இருந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்காக, யஜுர் வேதத்தின் அடிப்படையில் 'பிரக்ருதி வந்தனம்' என்ற இயற்கை பாடலையும் இயற்றி பாடியுள்ளார்.

21. News in Dinamalar, Coimbatore, 22.03.2022, Music from Wood performed as part of the International Day of Forests 2022 Celebrations of the FAO of the United Nations.